# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## சபை பிரச்சனைகளை சந்தித்தது

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

தேவகுமாரனாகிய இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பது நாட்களுக்கு பின்னர், அவரை பின்பற்றினவர்களுக்குள் வாழ பரிசுத்த ஆவியானவர் வந்தார்.



தந்தையாகிய தேவன், குமாரனாகிய (இயேசு) மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் இம்மூவரும் எப்படி ஒரே தேவனாக இருக்க முடியும் என்பதை சீஷர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும், அவர்கள் தேவன் தங்களோடு இருக்கிறார் என்று மனமகிழ்ச்சியாயிருந்தார்கள். அப்போஸ்தலர்கள் இயேசுவைப்பற்றி மற்றவர்களுக்குச்சொல்ல தேவன் அற்புதமான காரியங்களை நடப்பித்தார்.



இயேசுவை நம்பினவர்கள் தங்களுக்குரிய எல்லாவற்றையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டதினிமித்தம் எளியவர்களையும் ஆதரிக்க முடிந்தது.  ஆனால் அனனியா மற்றும் சப்பீராள் என்ற தம்பதியர் நேர்மையற்றவர்களாய் காணப்பட்டனர்.



அவர்கள் தங்களுடைய சில நிலங்களை விற்று, முழு பணத்தையும் அப்போஸ்தலருக்கு கொடுப்பதாக நடித்தனர். இரகசியமாக கொஞ்சத்தை தங்களுக்காக வைத்துக்கொண்டார்கள்.




"பரிசுத்த ஆவியானவரிடம் பொய்
சொல்ல உங்கள் இருதயத்தை
சாத்தான் எப்படி நிரப்பினான்...?"
என்று பேதுரு அனனியாவிடம்
கேட்டான். "நீங்கள்
மனுஷர்களிடத்தில் பொய்
சொல்லவில்லை ஆனால்
தேவனிடத்தில்
சொன்னீர்கள்."



பின்பு அனனியா கிழே
விழுந்து தன்னுடையா கடைசி
மூச்சைவிட்டான். வாலிபர்கள்
அவனுடைய சரீரத்தை
துணிகளில் சுற்றி வெளியே
எடுத்து சென்று அடக்கம்
பண்ணினார்கள்.



சற்று நேரத்திற்குப் பின், தன் கணவன் இறந்து போனதை அறியாமல், சப்பீராள் உள்ளே வந்தாள். அவள் பணத்தைப் பற்றி பொய் சொல்ல - அவளுக்கும் அதேபோல் நடைபெற்றது. இதை கேட்ட ஒவ்வொருவர் மேலும் பயங்கர பயம் வந்தது.



தேவனாகிய பரிசுத்த
ஆவியானவர்
அப்போஸ்தலர்
மூலமாக அநேக
அடையாளங்களையும்,
அற்புதங்களையும்
செய்தார். உதாரணமாக,
பேதுருவின் நிழல்
வியாதியஸ்தர்கள் மேல்



பட்டபோது அவர்கள்
சுகமடைந்தார்கள்.

அந்த நாட்கள்
பெரிய அற்புதத்தின்
நாட்கள், அவைகள்
தேவனுடைய
பிரசன்னத்தை
வெளிப்படுத்தியது.
அநேக மக்கள் மேலும்
மேலும் தேவனை
விசுவாசித்தார்கள்.



இது பிரதான ஆசாரியனை
கோபப்படுத்தியது. அவன்
அப்போஸ்தலரை
சிறைச்சாலையில்
போடுவித்தான்.



ஆனால் தேவதூதன் இரவிலே வந்து சிறைச்சாலையின் கதவுகளை திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து "போங்கள், தேவாலயத்தில் நின்று மக்களுக்கு இந்த வாழ்க்கைக்கான காரியங்களையெல்லாம் பேசுங்கள்," என்று சொன்னான்.



அப்போஸ்தலர்கள் வெளியே சென்று
இயேசுவை குறித்து பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்கள்.
காலையிலே, பிரதான ஆசாரியரின் ஆட்கள்
சிறைச்சாலை வெறுமையாக இருக்க கண்டார்கள்.

கடைசியாக அவர்களை அவன் கண்டபோது, பிரதான ஆசாரியன் அவனை திட்டினான். "இந்த நாமத்தினாலே நீங்கள் போதிக்ககூடாது என்று நான் உங்களுக்கு கண்டிப்பாக சொல்லவில்லையா?" "நாங்கள் மனிதருக்கு கீழ்ப்படிவதை பார்க்கிலும் தேவனுக்கு மாத்திரம் கீழ்ப்படியவேண்டும்," என்று பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பதிலளித்தார்கள்.



பிரதான ஆசாரியன் கடும் சீற்றம் கொண்டு, அப்போஸ்தலரை கொலை செய்ய ஆசைப்பட்டான். பதிலாக, அவர்களை அடித்து, விடுதலை செய்ய உத்தரவிட்டான்.



தங்களுக்கு வேதனை
வந்தாலும், அப்போஸ்தலர்கள்
தேவனுக்கு கீழ்ப்படிந்தார்கள்.
மற்றும் இயேசுவை குறித்து
பிரசங்கம் பண்ணுவதை
தொடர்ந்தார்கள்.



ஒரு நாள் ஸ்தேவான் என்றழைக்கப்படுகிற மனுஷன் கைது செய்யப்பட்டான். ஸ்தேவான் ஆண்டவராகிய இயேசுவை நேசித்தான். இயேசுவைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல பரிசுத்த ஆவியானவர் அவனை உபயோகப்படுத்தி வந்தார்.



ஸ்தேவான் தேவனுக்கு விரோதமாக பேசுகிறான் என்று சில மனிதர்கள் பொய் சொன்னார்கள். ஒரு போலி விசாரணைக்குப் பின்பு, ஸ்தேவான் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்திருந்தற்காக கல்லெறிந்து கொன்றார்கள்.



அவன் மரிப்பதற்கு
முன், ஸ்தேவான் பரிசுத்த
ஆவியினால் நிறைந்தவனாய்,
பரலோகத்தை நோக்கிப்
பார்த்தபோது அவன்
தேவனுடைய
மகிமையையும்,
மற்றும் இயேசு
தேவனின்
வலது பக்கத்தில்
எழுந்து
நிற்கிறதையும்
கண்டான்.



ஜனக்கூட்டம் அவனை
கல்லெறிந்த போது,
அவன் தேவனை
நோக்கி கூப்பிட்டு
சொன்னான்,
"ஆண்டவராகிய
இயேசுவே,
என்னுடைய
ஆவியை
ஏற்றுக்கொள்ளும்."



பின்பு, இயேசு சிலுவையில் செய்ததுபோல, இந்த துணிச்சலான மனிதன் தன்னுடைய சாவின் கடைசி மூச்சைக் கூட பயன்படுத்தி அந்த கொலைகாரர்களை தேவன் மன்னிக்கும்படி வேண்டினான்.



ஸ்தேவானுடைய மரணம் ஒரு புதிய அலை துன்பத்தை உருவாக்கியது. சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபன், ஸ்தேவானுடைய கொலைகாரர்களுக்கு உதவியவன், அவன் கண்ட கிறிஸ்தவர்களையெல்லாம் கைது பண்ணினான்.



அநேகர் தங்கள் வீட்டை விட்டு ஓடி யூதேயா, சமாரியா முழுமையும் சிதறடிக்கப்பட்டனர். அப்போஸ்தலர்கள் மாத்திரம் எருசலேமில் தங்கியிருந்தார்கள்.



எதிராளிகள் தங்களை கொலை செய்ய நினைத்தாலும், சிதறடிக்கப்பட்டவர்கள் எல்லா இடங்களிலும் இயேசுவைக் குறித்ததான நற்செய்தியை பிரசங்கம் பண்ணினார்கள்.



தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாழ்ந்ததாலும், அவர்கள் மூலமாக கிரியை செய்ததாலும் - இயேசுவை பின்பற்றியவர்களை ஒருவராலும் நிறுத்தமுடியவில்லை.



சபை பிரச்சனைகளை சந்தித்தது

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

அப்போஸ்தலர் 5-7

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16